செ.வெ.எண்: 40 நாள்:26.01.2017

# அரியலூர் மாவட்டத்தில் புதிய கால்நடை பராமரிப்பு மருந்தங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.எ.சரவணவேல்ராஜ் இ.ஆ.ப., அவர்கள் இன்று (26.01.2017) துவக்கி வைத்தார்.

அரியலூர் மாவட்டம், பொய்யதாநல்லூர் கிராமத்தில் கூடுதல் கால்நடை மருந்தகத்தினை சிதம்பரம் நாடாளுமன்ற உறுப்பினர் **திரு.எம்.சந்திரகாசி** அவர்கள் முன்னிலையில், மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் தலைமையில் இன்று (26.01.2017) குத்து விளக்கு ஏற்றி துவக்கி வைத்தார்கள்.

இம்மருந்தகத்தில் பசுவினம், எருமை, செம்மறியாடு, வெள்ளாடு, பன்றிகள், கோழிகள் மற்றும் இதர கால்நடைகளுக்கு சிறப்பு சிகிச்சை அளிக்கப்படுகின்றது. மேலும், பொய்யாதநல்லூர், குருவாடி ஆகிய கிராமங்களில் சுமார் 38,000 கால்நடைகளுக்கு தரமான சிகிச்சை மற்றும் இனப்பெருக்க சேவைகள் பெறுவர்.

இதுபோன்று, குருவாடி கிராமத்திலும் கூடுதலாக ஒரு கால்நடை மருந்தகம் திறக்கப்பட்டுள்ளது. இவ்விரண்டு கிராமங்களிலும் சேர்த்து **ரூ.1 இலட்சம்** மதிப்பிலான தரமான மருந்துகள் கால்நடைகளுக்கு வழங்கப்படவுள்ளது. எனவே, இவ்வாய்ப்பினை இப்பகுதி மக்கள் முழுமையாக பயன்படுத்திக்கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்நிகழ்ச்சியில், கால்நடைத்துறை இணை இயக்குநர் திரு.நசீர், உதவி இயக்குநர் திரு.பாஸ்கர், கால்நடை உதவி மருத்துவர் டாக்டர்.வேல்முருகன், அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.